# கா
# ஞ்
# சி

ஆசிரியர்
ண்ணாதுரை

20



26·9·65

# "வெல்க நாடே...!"

—(ஆனந்தி)—

புரையோடிப் புழுத்திட்டச் சமுதா யத்தை
பொருளியலும் ஒப்புரவும் தாழ்ந்து நின்று
கரையேற மாட்டாத மாக்கள் தம்மை
கண்ணியத்தைக் கடமைதனைக் கட்டுப் பாட்டை
குறையில்லாப் பகுத்தறிவைக் கொண்டே ஊட்டி
குவலயத்தில் தலைநிமிர்ந்து நடக்கச் செய்வோம்!
நெறிகொள்ள நல்லுறவால் உண்மை அன்பை
நிலைநிறுத்த வழிமுறைகள் செய்து நிற்போம்!

இதயத்துக் கொந்தளிப்பை எழுச்சி தன்னை
இப்படியென் கவிதையிலே வடித்து விட்டேன்.
உதயத்தே மலர்கின்ற தாம ரையே!
உள்ளத்துப் பெண்ணரசி! ஓடி வாடி!
மதுவொத்த நற்கவிதை சுவைப்பாய்! நீஎன்
மலர்கவிக்கு நயம்பாராட்(டு)! என்றேன் நானும்
புதுவித்தோ? ஏதேனும் மலர்ந்த துண்டோ
பொன்னத்தான்? என்றவளும் வாங்கிப் பார்த்தாள்.

கன்னியவள் உதட்டசைவை விழிக்கோ ணத்தை
கண்டிடத்தான் ஆவலுடன் காத்து நின்றேன்
என்னிலொன்றும் மின்விழியும் நிமிர்ந்தாள் அந்தோ!
இருவிழியும் தணல்பொறியாய் என்னை நோக்க
என்னத்தான் உங்கள்மனப் பொறுப்பு ணர்ச்சி?
என்றிட்டாள் முகம்சுளித்து! குழம்பி நின்றேன்!
வெண்ணிலவே! என்னபுதிர் போடு கின்றாய்?
விளக்கிச்சொல் கண்மணியே! என்று கேட்டேன்.

மனக்கோயில் சுடர்விளக்கும் அமைதி கொண்டாள்!
மைவிழியில் ஆனாலும் வீரம் மின்ன
எனைவென்ற பெண்சொன்னாள்; உங்கள் நெஞ்சின்
எண்ணத்தில் கொள்கைதனில் குற்றம் இல்லை!
நினைத்தாலும் கொதிக்கின்ற சமுதா யத்தின்
நிலைமைதனை சீர்செய்ய வேண்டும் உண்மை!
எனைச்சேரும் திண்டோளே! ஆனால் நந்தம்
எழில்நாட்டின் நிலையன்றோ காண வேண்டும்?

வடக்கெல்லை தனில்தொல்லை கொடுக்கு மந்த
வானரங்கள் தமைவிரட்டி நமது மண்ணை
திடத்தோடு காப்பதன்றோ இன்றை வேலை!
தினவெடுக்கும் தடந்தோள்கள் எல்லை நோக்கி
திடத்தோடு திரும்பட்டும்! உள்ளம் தூண்டும்
தீநாக்குக் கவிக்கணைகள் திசைமா றட்டும்.
மடம்பட்டச் சமுதாயச் சீர்தி ருத்தம்
மனம்போலச் செய்திடலாம்! ஆனால் இன்று

கொந்தளிப்பைக் கவியாக்கி நாடு காக்கக்
கொடியேந்தும் தோழர்க்கே அளித்தி டுங்கள்!
தந்திடுங்கள் உணர்வூட்டும் கவிதைச் செல்வம்
தமிழகத்தின் நல்வீரம் துடித்துப் பொங்கும்!
சந்தமன்ன இல்லரசி கூற்றைக் கேட்டேன்
சத்தான அவள் மொழியின் உண்மை கண்டேன்!
செந்தமிழில் உணர்வுகளைக் கவிதை யாக்க
சிலிர்ப்போடு நானமர்ந்தேன்! வெல்க நாடே!

# ரஷ்யாவின் அரசு குண்டு

சோவியத் ரஷ்யா கண்டுபிடித்துள்ள 5-கோடி டன் டி. என். டி. வெடி சக்தியுள்ள அரசு ஹைதுண்டைப்பற்றி யு. எஸ். விஞ்ஞானி டாக்டர் ரால்ப்லாப் பின்வரும் விவரத்தைத் தெரிவித்திருக்கிறார்:-

(1) இந்த அரசு குண்டு 400 அடி ஆழமும் ஒன்றரை மைல் அகலமும் உள்ள பள்ளத்தைப் பறிக்கும்.

(2) 10-மைல் சுற்று வட்டாரத்தில் உள்ள எல்லா செங்கல் வீடுகளையும் 16-மைல் வட்டத்தில் உள்ள எல்லா மர வீடுகளையும் அழித்துவிடும்.

(3) தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி 7-மைல்வட்டத்தில் உள்ளஎல்லா மக்களும் அழிந்துவிடுவர்.

(4) 50-மைல்வட்டத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் நெருப்புக்காயங்கள் ஏற்படும்.

(5) 10,000 முதல் 20,000 சதுர மைலுக்குக் கதிரியக்கம் பரவக்கூடும்.

## 100-மைல் வேகத்தில்

ரஷ்யர்கள் தமது 5-கோடி டன் வெடி சக்தியுள்ள அரசு ஹைகுண்டை 100-மைல் உயரத்திற்கு ராக்கெட் மூலமாகச் செலுத்திய பிறகே வெடிக்க வைத்துச் சோதனையை நடத்த வேண்டும் என்றும் இல்லாவிட்டால் முதலில் ரஷ்யரே பாதிக்கப் படுவர் என்றும் யு. எஸ். விஞ்ஞானி டாக்டர் ரால்பலாப் கூறினார். சோதனை நடத்தப்படும் சமயத்தில் உயரே பார்க்காமல் இருக்குமாறு பத்து லட்சம் சதுர மைல் பரப்பில் வசிக்கும் ரஷ்ய மக்களை முன்னதாக எச்சரிக்கை செய்யவேண்டும்என்றும் இல்லாவிட்டால் அவர்களுடைய விழித்திரைகளில் தீப்புண் ஏற்பட்டு பார்வை கெடும் என்றும் அவர் கூறினார்.



# போர் நிறுத்தம்

மலர் 2 ○ 26—9—65 ○ இதழ் 9

"ஆயிரம் ஆண்டுகள் போர் நடக்கும்! அறிந்திடுக! அஞ்சி நடுங்கிடுக!" என ஆர்ப்பரித்த புட்டோ ஐ. நா. சென்று "ஐயன்மீர்! போர் நிறுத்துகிறோம்! ஐ. நா.வின் கட்டளை ஏற்கின்றோம், ஆயின் அந்தக் கட்டளை நியாயமல்ல! நியாயமில்லை எனினும் ஒப்புகிறோம், நாங்கள் 'அமைதி'யை நாடுகிறோம் என்று கூறினார்.

பாகிஸ்தானியத் தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுக்கத் தொடங்கி நாட்கள் இருபத்திரெண்டு ஆயின! "ஆயிரம் ஆண்டுப் போர்" பற்றி ஆர்ப்பரித்த புட்டோ, ஊதாண்டு கேட்டுக்கொண்டபோது, 'அமைதி நாடிடும்' போக்கை எங்கே கொண்டுபோய் ஒளித்து வைத்திருந்தாரோ தெரியவில்லை.

அதேவிதமான பாணியில்தான் அயூப்கானும் பேசுகிறார். காஷ்மீர் பிரச்சினைக்கு ஒரு கௌரவமான நியாயமான தீர்வு காணாவிடின், இப்போது மூண்டதனைவிட மிகக் கடுமையான போர் மூண்டிடும் என்று பேசுகிறார்.

இந்த 'உருட்டல் மிரட்டல்' பேச்சிலாவது, தலைவர்கள் வல்லவர்களாக இருக்கிறார்களே என்று பாகிஸ்தானியர் பெருமைப்பட்டுக் கொள்வார்கள் என்ற எண்ணம் போலும்!

போகட்டும்—எப்படியோ ஒன்று, போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது—எவருடனும் போருக்குத் தானாகச் சென்றிடும் அரிப்பு அற்ற இந்தியா இதனை வரவேற்கத்தான் செய்கிறது—தொல்லை இனி இல்லை, ஆபத்து துளியும் இல்லை என்று எண்ணி, உறங்கிக் கிடந்திடும் போக்கில் அல்ல—விழிப்புடன் — உரிமை காத்திடும் திறனுக்குத் துளியும் பழுதுபடாத விழிப்புடன்.

பீரங்கிகள் பேசாமலிருக்கும்; விமானங்கள் குண்டுவீசச் செல்லாது; பாகிஸ்தானிய டாங்கிகளை நொறுக்கிடும் வேலை இருக்காது; அவர்களின் அரண்களைப் பிளந்திடும் வேலையும் இருக்காது — அவ்வளவுதான் இப்போதைக்கு!

அமைதி ஏற்பட்டுவிட்டது — சிக்கல்கள் தீர்ந்துவிட்டன — பகை நீங்கிவிட்டது — நேசத் தொடர்பு பக்குவமாகிவிட்டது என்ற நிலை உருவெடுப்பதற்கு முன்பு பல கட்டங்கள் உள்ளன-ஒவ்வொரு கட்டத்திலும், "ஆயிரம் ஆண்டு போரிடுவோம்" என்று அறற்றிடும் போக்கும், "ஐ. நா.வைவிட்டு விலகிடுவோம்" என்று மிரட்டிடும் போக்கும், 'அருமை நண்பனும் சீனா தந்த பெருமைமிகு உதவிக்கு நன்றி கூறிடும் போக்கும், பிறிதோர் பகை மூட்டிடக்கூடிய விதமாக வளர்ந்திடக்கூடாது. அமைதி பிறந்திட வேண்டுமெனில், அறம் மறந்திடா மனநிலை மலர்ந்திட வேண்டும்.

குறியும் நெறியும் சரியாகப் புரியவில்லை, பாகிஸ்தான் அதிபர்கட்கு. எதற்காக இந்தத் தாக்குதலைத் துவக்கினார்கள்? அவர்கட்கே புரியாது! தாக்கிய உடன், தாள் பணிந்துவிடும் இந்தியா, தங்கத் தட்டினில் வைத்துத் தந்திடும் காஷ்மீரத்தை என்று எண்ணிக்கொண்டது-எத்தனை ஏமாளித்தனம்! மசூதி, மாதாகோயில், மருத்துவமனை, மக்கள் குடியிருப்பிடம் இவைகள் மீது குண்டு வீசுதல், கொடுமை, மடைமை என்று குவலயம் கூறும் — இவர்கள் இங்கெலாம் குண்டு வீசி, தம் இழிசெயல் விளக்கிக்கொண்டார். சிறையில் உள்ள ஓர் மருத்துவமனையைக்கூட 'சீலர்கள்' விட்டாரில்லை! அங்கும் குண்டு! குஜராத் முதல்வர்—துணைவியார் சென்ற விமானத்தைச் சுட்டு வீழ்த்தி அவர்கள் உயிர் குடித்த கொடுமையினைச் செய்தனர். குவலயம், மன்னித்திடாது, இக்கொடுமைச் செயலினை. ஆனால் எதிர்த்துமே தாக்கிய போர்முனைகள் எங்கும், என்ன நாம் காண்பது? அழிவு! அழிவு! பாகிஸ்தானியப் படையினர், டாங்கிகள், விமானம், கருவிகள், தளங்கள் யாவும் படுநாசமாயிற்று.

காஷ்மீர் பகுதியில் முன்பு அமைந்திருந்த போர் நிறுத்த எல்லைக்கோடு நெடுக, ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தமுனைகள்—முகாம்கள்—இந்தியத் துருப்புகளிடம் சிக்கிவிட்டுள்ளன.

சியால்கோட் முனையில், இந்தியத்துருப்புகள் ஆற்றல்மிக்க தாக்குதலை நடத்தி, மேற்கு பாகிஸ்தானுக்குள் பதினாறுமைல் உள்ளே பாய்ந்து நிலைபெற்றிருக்கின்றன. அதுபோலவே லாகூர் முனையில், எட்டு மைல்கள்! ராஜஸ்தான் முனையில், சிந்துப் பிரதேசத்துக்குள் முப்பதுமைல் உள்ளே சென்றுளது இந்தியப்படை.

பாகிஸ்தானியப் படைச் சம்பு — ஜாரியன் முனையில், இந்தியாவுக்குள் பத்துமைல் தொலைவு உள் நுழைந்துள்ளன.

டாங்கிகள்—விமானங்கள்— தளவாடங்கள்— ஆகியவற்றின் சேதம் பாகிஸ்தானுக்கு மிக அதிகம்.

தாக்குதலுக்கான போர் யந்திரம் நொறுக்கப் பட்டு விட்டிருப்பதாக, இராணுவத் துறை நிபுணர்கள் கூறுகின்றனர்.

இங்கிலையிலும் 'ஆயிரம் ஆண்டு போர்நடக்கும்' என்று ஆர்ப்பரித்தாரே, புட்டோ அதுதான் விந்தை!

போகட்டும்—போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது—அதுவரையில் மகிழ்ச்சி கொள்வோம்.

பாகிஸ்தானின் அதிபர்கள், மூன்று உண்மைகளைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்—வெளியே கூருவிடினும், உள்ளத்தில் பதிந்திருக்கும்.

பதிலடி தரும் ஆற்றல், இந்தியாவிடம்
நிறம்ப இருக்கிறது.

ஜனநாயகமுறைப்படி பலகட்சிகள் இங்கு
உள்ளன எனினும், நாட்டுக்கோர் ஆபத்து
என்றால், கட்சி பேதங்கள் மறைந்து ஒரே
'அணி' வடிவமெடுக்கிறது,

முஸ்லீம்கள் என்றால் பாகிஸ்தானை
ஆதரிப்போர் தாம் என்பது பொய் என்பது
மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

பாகிஸ்தானிய அதிபர்கள் இவ்வுண்மைகளை உணர்ந்திடினும் உணர மறுத்திடினும், உலகம் இவ் உண்மைகளை நன்கு உணர்ந்துவிட்டது.

நாட்டுக்குள்ளே ஒரு புது உறுதி பிறந்துவிட்டிருக்கிறது.

களத்தில் நின்று கடும்போரிட்டு, பகைப்படையை விரட்டி அடித்திடும் ஆற்றல் காட்டிய மறவர் படையினை நாடு நன்றியுணர்ச்சி பொங்கும் நிலையுடனே வாழ்த்துகிறது, வணக்கம் கூறுகிறது.

களத்திலே உயிர் நீத்த வீரருக்கு, நாட்டு மக்கள் இதயமே கோயிலாகி விட்டது—மெய் சிலிர்க்க வீரக் காதைதனைக் கேட்டுக் கேட்டு, விம்முகிறார் நாட்டவரும்; வீரம் போற்றுகிறார்; விழிநீரைக் காணிக்கையாக்குகிறார். வாழ்க நம் படைவீரர்கள்! வெல்க அறம், நெறி, ஆற்றல் மறவரின் துணையும்கொண்டு.

○

# ஜால வித்தை!

ஜால வித்தையில் வல்லவர்களல்லவா *சீனர்கள்!!* கயிறு பாம்பாகும், பாம்பு வாய்க்குள் போகும், வந்திடும் காதின் வழி! மங்கையை ஓர் பெட்டியில் போட்டு; கத்தியால் குத்திடுவார், பெட்டியைத் திறந்தால் அங்கு பெண் இருந்திடமாட்டாள்! பற்பல உண்டு சீனர்கள் காட்டிடும் கண்கட்டு வித்தை. ஆனால் அத்தனை வித்தைகட்கும் 'அப்பன்' போன்றதோர் வித்தைதன்னை, இப்போது காட்டினார்காண், சீனத்து மாசேதுங்கு.

சிக்கிம், நமக்கு எல்லை நாடு; நட்புறவு கொண்ட நாடு; அதன் பாதுகாப்புக்கான பொறுப்பினை ஏற்றுக் கொண்டோம்; புவியுளோர் அறிவார் நன்றாய்.

இந்தச் சிக்கிம் நாட்டை யொட்டி இருப்பது சீன எல்லை.

அவரவர் எல்லை நின்று காத்திடும் உரிமை அவரவர் நாட்டுப் படையினர்க்குண்டு. இதில் ஐயமில்லை.

இது நிலை, எனினும், மாசேதுங்கும் செய்தது என்னவென்றால், காட்டினார் இந்தியா கட்டிய அரண்கள் பலவும், சீன மண்ணிலே இருப்பதனை—சிக்கிம் எல்லையைத் தாண்டி.

இந்த அரண்களைக் கட்டியது அடாது! உடனே இடித்திடுக! இல்லையெனில் வந்திடும் பேராபத்து என்று, விந்தைமிகு எச்சரிக்கை யொன்றினை, பாகிஸ்தான் தாக்குதலால் போர் மூட்டப்பட்ட நிலை எண்ணி நொந்து நின்ற இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். சீன மண்ணிலே அரண்கள் கட்ட எண்ணமே கொண்டதில்லை; ஏன் எமக்கு அரண்கள் அங்கு; அரண் ஒன்றும் இல்லை என்று இந்திய அரசு கூறிற்று. பார்! இதோ பற்பல அரண்! என்று மீண்டும் கூறினார் மாசேதுங். பாரிலே ஓர் நடுநிலையாளர்தன்னை, பார்த்திடச் சொல்லலாமா என்று கேட்டார் லால்பகதூர் மாசேதுங்குவின் பேச்சைக் கேட்டு. நடுநிலையாளர் என்றோர் நபர் ஏது உலகமீதில்! நான் ஒப்பேன் அம்முறைக்கு, நாமே காணச் செல்வோம், காட்டுகிறேன் அரண்களை, வாரும் என்று அழைத்திட்டான் சீனத்து மாசேதுங்கு. இல்லாததனைக் காட்டிடல், கண்கட்டு வித்தை! இல்லை ஒரு அரணும் அங்கு; அறிவோம் நன்றாய். என்றாலும் அழைப்பினை மறுப்பானேன் என்று எண்ணி, வருகின்றோம், நாள் குறித்து, நாம் செல்வோம், காட்டிடுக அரண்களை என்று பதிலளித்தார் கசப்பு ஏன் என்ற நல்லெண்ணத்தால்.

ஒப்பினர் நாம் செப்பினதற்கு என்று பதைபதைத்து, 'ஓ! ஓ! இது சூது! ஆமாம்! முன்னம் நான் பன்முறை சொன்னபோது ஒப்பிட மறுத்தாய் நீ, ஆதலாலே இப்போது நாம் இருவர் சென்று காண இசைவு தரும் போக்கை நான் எதிர்க்கின்றேன்; பார்ப்பானேன்; அரண்கள் உள்ளன பார்க்கின்றேன்; உடனே அழித்திடுக! இல்லையேல் அழிவு வரும் உமக்கு என்றான்.

வருவது வரட்டும், வல்லமை மிக்கவரின் தாள் பணிதல் தன்மான நாடதனின் பண்பாகாது; நமது படை போரிடும் உறுதியாக என்று அறிவித்துவிட்டார் லால்பகதூர். படை பல பாய்ந்தன; பயமூட்டச் சுட்டன; பார்த்து நின்றனர் நம் படையினர்; எல்லை தாண்டி உள்ளே வந்தால் எதிர்த்தடித்திடும் உறுதி கொண்டனர்.

இந்நிலையில், மாசேதுங் இடியொலிச் சிரிப்புடன் "நமது படை வலிவு கண்டு இந்தியா மிரண்டுபோய் கட்டிவைத்த அரண்களை இடித்துத் தள்ளி, கைகூப்பி நிற்பதனைக் காண்கிறேன் நான். என் வெற்றி கண்டீரோ, ஜெகத்தீரே, என் ஆணை மீறில் எவர்க்கு ஆகும்!! என்று தெரிவித்தான்.

பற்பல நாட்டினர் இதனைக் கேட்டு, பரிகாசச் சிரிப்பெழுப்பிக் கூறுகின்றார், தாக்கிடத் துணிவில்லை தரணியில் உள்ள நல்லோர் கூடியே நொறுக்குவர் என்ற திகில்! — எனினும் பேச்சிலே பீரங்கி முழக்கமேற்றி, பெருமை தேடிடும் போக்கினைக்கொண்டார் மாசே! அவர் ஆசை தீர்ந்து போகட்டும், நமக்கென்ன நட்டம் என்றார்.

இல்லாத அரண்களை இருப்பதாகக் காட்டுவதும் இடித்திட்டார் எம் எச்சரிக்கைக்குப் பிறகு அந்த அரண்களைத்தான் என்று கூறிடினும்; கைதேர்ந்த கண்கட்டு வித்தைக்காரன்தானும், வாய்பிளந்து அதிசயித்து நிற்கும் வகையான, தெகிடுதத்தம்!! *சீனத்து ஜாலம்!!* வேறொன்றுமில்லை!!

●

# இவர் டாக்டர்!

கண் எதற்கு?
காணுதற்கு!
காதெதற்கு?
கேட்டிடத்தான்!
வாய் எதற்கு?
பேசிட!

ஆமாம்! இஃதென்ன கேள்விகள், பாலகனோ இது போலக் கேள்விகட்கெல்லாம் பதில்கூற என்று கேட்

(10-ம் பக்கம் பார்க்க)

# தம்பி


## பகைவன் பணியலானான்....!

மன்னனும் மன்னன்! மன்னன் மகனானதால் மன்னனானேன், திறமையாலா! நாட்டுக்கு ஒரு மன்னன் தேவை என்பதால், மன்னனாக்கப்பட்டோன், மன்னர்க்கு வேண்டிய அறிவாற்றல் இருப்பதனாலா! மணிமுடி ஒளிவிடுகிறது! கண்கள்? துளியாவது வீரஒளி காண்கிறோமா! வீரம் இருந்தால்தானே! கண் வழியாக வழிகிறது, மமதை! மன்னன என்பதால் அதனைக் கெம்பீரம் என்கிறார்கள்—புலவர்கள்கூட! மார்பிலே புரள்கின்றன விதவிதமான மாலைகள்! ஒரு வெற்றி மாலையையாவது பெற்றதுண்டா அந்த மார்பு! களமே கண்டதில்லை, பெயர் மட்டும் வெற்றி பல கண்டோன்! — என்பதாக. பொருளற்ற பட்டம்! பொறுத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது — மன்னன் ஆக்கப்பட்டுவிட்டானே, என்ன செய்வது! நாடு வாழ்ந்திட, தொழில் பெருகிட, செல்வம் மிகுந்திட, கலை வளர்ந்திட, செய்தது என்ன? உள்ளது உருக்குலைந்து போவதனைக் கூடத் தடுத்திட ஆற்றலற்று, உள்ளதில் உருசிமிக்கவை எனக்கே என்று கூறிடும் குரல் மட்டும் கொண்டவனாக உள்ளான்—கொற்றவன்! என்பது பட்டம்! மற்றவர் அதனை மறுத்திட இயலுமா—அவனே மன்னன்!

கோட்டைகள் கலனாகிக் கிடக்கின்றன, கொத்தளங்கள் செம்மையாக இல்லை, அரண்களிலே பிளவு, அகழிகள், தூர்ந்துபோன நிலையில்—என்று படைத் தலைவர்கள் கூறுகின்றனர்—என்னிடம்! மன்னனிடம் கூறுவதுதானே என்கிறேன், மன்னனிடமா! என்று கேட்கிறார்கள். இவன் ஒரு மன்னனா என்று கேட்பதுபோலிருக்கிறது அவர்களின் முகக்குறி! இப்படி ஒரு மன்னன்! என்று எண்ணி எண்ணி எரிச்சல்படவேண்டி இருக்கிறது.

வரி கேட்டுப் பெறுவதிலே மட்டும், வல்லவனாக இருக்கிறான்—தொட்டதற்கெல்லாம் வரி! தொடர்ந்து வரி! தொல்லைதரும் முறையிலே வரி! இவ்வளவா என்று கேட்போரும், எமக்கா என்று கவலைப்படுவோர், எங்கிருந்து கட்டுவது என்று ஏக்கம்கொள்வோரும் நிரம்ப! பலர் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள்! என்னிடம்! மன்னனிடம் முறையிடவேண்டும், ஆனால் என்னிடம் முறையிடுகிறார்கள். நீங்கள் சொல்லக்கூடாதா, நீங்களெல்லாந்தானே சொல்ல வேண்டும், நீங்களெல்லாம் சொன்னால்கூடவா கேட்கமாட்டார் என்று கூறுகிறார்கள்! சொல்வதைப் புரிந்துகொள்கிற திறமைகொண்டவன் மன்னனாக இருப்பதாக எண்ணிக்கொண்டு! சொல்வதைப் புரிந்துகொள்ளும் திறமை இருக்கிறதா என்பதுகூட இருக்கட்டும் ஒருபுறம்—தெளிவளிக்க முடியும எவ்வளவு மந்த மதியினனுக்கும்—ஆனால் இந்த மன்னன், எதையாவது சொல்ல இடம் கொடுத்தால்தானே! எதையாவது சொல்லத் தொடங்கிய உடன், கரம் காட்டுகிறான், நிறுத்து என்பதாக! கனைக்கிறான், கண்களை உருட்டுகிறான், எல்லாம் தெரியும் என்கிறான்! சொல்லாததற்கு முன்பாகவே, எல்லாம் தெரியும் என்கிறான்! என்ன செய்வது! எமது மன்னன் என்று நானுமல்லவா மற்றவர்களுடன் சேர்ந்து கூறவேண்டி இருக்கிறது, இத்தனை மண்டைக்கனம் மிகுந்தவனை.

மன்னனின் முறையை மக்களுக்கு ஏற்றதாக, அவர் நலன் காத்திடத்தக்கதாக மாற்றி அமைக்கவேண்டும் என்று கூறிடவே துணிவு வரவில்லை, பலருக்கு; மெள்ள மெள்ளத்தான்



அந்தத் துணிவு பிறந்தது; வியந்திடத்தக்க அளவு வளர்ந்தது. ஆயினும் என்ன? கலக்கம் கொண்டானா? இல்லையே! கவலைப்படுவதாகக்கூடக் காட்டிக்கொள்ள வில்லை. எவரெவர் எதிர்ப்புப் பேசுகிறார்கள் என்று கண்டறியச் செய்து, ஆசாபாசத்திற்கு அடிமைப்படக் கூடியவர்களை இழுத்துக்கொண்டுவிட்டான். எக்காள மிட்டு வந்ததுகளெல்லாம் இளித்துக்கிடக்கின்றன! மன்னன் மன்னன்தான்! என்று தத்துவம் பேசுகின் றன. இவ்விதமான இயல்பு இருந்திடும் நாட்களில் மன்னன் மேற்கொண்டுள்ள முறைகளை மாற்றிடும் முயற்சியில் வெற்றி எங்ஙனம் கிடைத்திடும். முறை மாறவேண்டும் என்று என்னிடம் முறையிடுகிறார்கள், அனைவரும் சேர்ந்து பணியாற்றினால் மட்டுமே, முறை யினை மாற்ற முடியும் என்றுகூறி அழைத்தாலோ, அங்காடி வேலை மும்முரம் என்கிறான் ஒருவன், அரண் மனையின் அலங்கார வேலைக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுவிட்டேன், என் செய்வது என்கிறான் மற்றொருவன், புதிய நூலொன்றினை அரங்கேற்ற அரச மண்டபம் தந்திருக்கிறார்கள், அங்கிலையில் நான் எப்படிச் சேரமுடியும் என்கிறார் இன்னொருவர்—ஒவ் வொருவருக்கு ஒவ்வொரு காரணம்!! மொத்தத்தில், தயக்கம் தடுமாற்றம்!! குறை கூற மட்டும் தயக்க மில்லை—என்னிடம் வந்து பேசுகிறார்கள்.

ஆத்திரம் ஆத்திரமாகப் பேசினார், நாடே கெடும்! வாழ்வே பாழ்படும்! என்றெல்லாம் அரிமானுரைத்தார்; ஆச் சரியப்பட்டுப் போனேன்! அடுத்த திங்கள் பார்க்கி றேன், அரசனுடைய அரண்மனைக் காவற்படைக்குக் கௌரவ தளபதியாகி விட்டிருக்கிறார்! இவர் போன் றாரை நம்பி என்ன செய்திட முடியும்!!

நாலு இடத்தில் சற்றுக் கொதிப்புடன் பேசினால் போதும், அவர்களை நாடிவருகிறது பட்டம், பதவி; செல்வம், சீர்! உடனே அவர்களுக்கு 'ராஜபக்தி' பொங்கி வழிகிறது. நான் என்ன செய்ய!!

✽

கீர்த்தி மிக்க மரபினர்! அப்பழுக்கற்ற இயல்பினர்! பலருக்குப் பரிவு காட்டி வாழ்வு அளித்தவர்! களம் பல கண்டவர்! எவர் கரத்தையும் நம்பிப் பிழைத்திட வேண் டிய நிலையினர் அல்ல! ஆடம்பர வாழ்க்கை தேடி அலை பவரல்ல! அடிவருடிகளைத் தேடிக் கொள்பவருமல்ல, இளித்துக் கிடந்திட இசைபவருமல்ல. அரசர் அவை யிலே இடம் கேட்பவரும் அல்ல; ஆங்கு இடம் பெற்றா ரிடம் பொருமை கொண்டவருமல்ல. உழவும் தொழி லும் அறிந்தவர். உள்ளது போதும் என்ற நினைப்பினர்; ஊர் சீர்பட ஏதேனும் செய்திட வேண்டுமென்பதிலே பெருவிருப்பம் கொண்டவர்; அதற்குத் தக்கதாக அரசு மாறவேண்டும், மாற்றப்பட வேண்டும் என்பதிலே, மிகுந்த நாட்டம் கொண்டவர் நம்பிக்கோட்டை செம் பியமாதேவர். அவருடைய மனக் குமுறலையே மேலே காண்கின்றோம். எனினும்.........

✽

இளவரசன் தொட்டால், பூங்கொடி பொற்கொடி யாகும் என்பதனைக் கூறுவதுதானே......

கூற இடம் கொடுத்தால்தானே அந்த குலக் கொடி......

இழுத்துவரச் சொல்லி எட்டுப் பேர்களை இப் போதே அனுப்புக! என் கட்டளை! இனி அந்தப் பெண் ணிடம், கொஞ்சப் போவதில்லை, கெஞ்சிடப் போவது மில்லை! மஞ்சம் வந்தாக வேண்டும்! மன்னன் மகனுக்கு விருந்தாக வேண்டும்! இது அரசனாகப் போகின்றவன் ஆணை! மந்திரியாக வேண்டும் என்ற விருப்பம் இருப் பின், இன்றிரவே, இந்த என் ஆணையை நிறைவேற் றிடுக!

இவ்விதம் கெடுமதி கொண்டு களியாட்டம் ஆடி டும் போக்கினன், இளவரசன். ஆனால் அந்தகை யவனும்......

✽

உழைத்து உழைத்து உருக்குலைந்து போகிறோம், மாடாக உழைத்து ஓடாகிப் போகிறோம் ஏன் பிறந் தோம் என்ற ஏக்கம் தாக்கிடத் தத்தளிக்கிறோம் என்று கதறிக் கிடந்திடும் நிலையில் பாட்டாளி! ஆனால் அவனும்......

நாட்டைத் தாக்கிடப் பகைவன் வந்திடும்போது,

எல்லையைத் தாண்டி எதிரிப் படை, நாட்டுக் குள்ளே பாய்ந்திடும்போது,

கோட்டைகளை இடித்திட, கொத்தளங்களைப் பிளந்திட, மாற்றான் படை வருகிறபோது,

அடித்து நொறுக்குகிறார்கள், அழிவை ஏவுகிறார்கள், அடிமை கொள்ள வருகின்றார் கள் அன்னிய நாட்டினர் நம் நாடு நோக்கி என்ற சேதி செந்தீயெனக் கிளம்பிடும் போது,

எடடா வாளினை! தொடடா போரினை! தாக்கிடக் கிளம் புக! தருக்கரைச் சாடுக! போரிட வந்திடுக! புயலெனக் கிளம்பிடுக!—என்று முழக்க மெழுப்பி, திரண்டெழுந்து சென்று, பகைப் படையினைத் தாக்கி, இன்னுயிர் இழந் திடவும் துணிந்து போரிட்டு, நாட்டைக் காத்திட, மானம் காத்திடவே முனைந்து நிற்பர்!

காவியம் புனைந்திட, ஓவியம் தீட்டிட, கட்டிப் பொன்னைப் பெற்றுக் குவித்திட, காதலின்பத்தில் திளைத்திட இதுவல்ல நேரம்! எதிரியின் மார்புக்கு நேராக நம் ஈட்டியினைப் பாய்ச்சிட வேண்டிய நேரமிது! வேறு எது குறித்தும் நினைத்திட, கதைத்திட நேரமல்ல இது! எதிரியின் கால் நம் நாட்டு மண்ணில் பட்டுவிட் டது! நாட்டின் மாண்புக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது. பழி துடைப்போம்! பகை முடிப்போம்! என்று வீரஉரை யாற்றி வாளொடு கிளம்புவர், வென்று திரும்புவர், பலர் வெஞ்சமரில் வீழ்ந்து படுவர். விந்தையா? வீரத்தின் இயல்பு! நாடு காத்திடும் நற்பண்பு கொண்டோர், நாட்

டுக்கோர் ஆபத்து என்றதும், தத்தமது மனக்குமுறல், உல்லாச இயல்பு, சலிப்பு, தவிப்பு, எனும் எதனையும் மறந்திடுவர், நாட்டுக்கு வந்துற்ற ஆபத்தினைப் போக்கிட துடிதுடித் தெழுவர், வீரப் போரிடுவர்.

அன்றோர் நாள் இருந்த இயல்பு மட்டுமல்ல இது, என்றும் எழுந்திடும் இயல்பு!

இன்று நாட்டுக்கு ஆபத்து என்ற நிலை பிறந்ததும், நாட்டு ஆட்சிமுறைதன்னில் மாற்றம் பலகாண எண்ணி, மக்கள் மன்றமதில் பணியாற்றிடும் கட்சியினர் அனைவருமே, இதற்கு இது நேரமல்ல! எதிரி நுழைந்துள்ளான்! என்றுணர்ந்து ஆர்த்தெழுந்தார், பொங்குமாங் கடல்போல! புலிபோலப் பாய்கின்றார், புல்லர்களைச் சாடுகின்றார்! புவியுள்ளோர் புதுமை இது! புதுமை இது! எனப் புகல்கின்றார்!

❋

பிறநாடுகளிலே நடைபெற்ற போர் குறித்து, விவரம் பலகொண்ட விளக்க ஏடுகள் பல உண்டு. படைத்தலைவர் பற்பலரின் திறமைதனைக் காட்டிடும் காட்சிகள் பலவற்றைப் படம் பிடித்துக் காட்டுதல்போல், வரலாற்றில் இணைத்துள்ளார். படித்திடும் அந்நாட்டு மக்களிடம் வீரம் கொழுந்துவிட்டுக் கிளம்பிடவும், நாட்டைக் காத்திட எத்தனை எத்தனை வீரர்கள் குருதியினைக் கொட்டினர் என்ற சேதி அறிந்ததனால் எழுச்சி மிகக் கொண்டிடவும், வாய்ப்பு நிரம்ப உண்டு. படைத்தலைவர் குறிப்புகளும், களம் அமைந்த விவரமதும், போர்மூண்ட வகையதுவும், மூண்ட போரில் முன்னணியின் செயல்முறையும் துணையணியின் செயல்முறையும், கருவிகளின் வகையும் அளவும், இன்னபிற விவரங்கள், தெரிந்திடவும், தெரிவதனால் போர் முறைகள் பலபற்றி அறிந்திடவும், அறிவதனால் ஆற்றல் மிகுந்திடவும் வழி உண்டு; மற்றைய நாட்டில்.

மாவீரன், மண்டலம் பல வென்ற தீரன், எந்நாடு சென்றாலும் அதனைத் தன்நாடு ஆக்கிக்கொண்டோன் என்றெல்லாம் புகழ்பெற்ற ஜூலியஸ்சீசர், களந்தனில் கடும்போரிட்டு வந்த காலை, ஒவ்வொரு நாளிரவும் அன்று நடந்ததனை விளக்கமாகக் குறிப்பெழுதிவைத்தனனாம்; அந்தக் குறிப்பு, பிறகோர் ஏடாகி, போர் முறை பயில்வோர்க்கு அருமைமிகு நூலாகி நின்றது.

வேறுபல போர்த்தலைவர் ஆற்றிய வீரச் செயல்கள், ஏடாகி நாடுதனின் நற்புகழை விளக்கிடவும், உலகோர் கற்று புத்தார்வம் பெற்றிடவும் வாய்ப்பளித்துள்ளன.

போர் முறைபற்றி மட்டுமின்றி, களந்தன்னில் வெற்றி கிட்டியதற்கும், சில வேளை தோல்விவந்து தாக்கியதற்கும், விளக்கமாய்க் காரணங்கள் தந்துள்ளார் ஏடுகளில்.

எத்தனையோ வீரப்போர் நடத்தினோர் நம் தமிழர்! மன்னர்கள் ஆண்டபோது!!

கங்கைகொண்டானென்றும் கடாரம் வென்றானென்றும், ஈழம் சென்றானென்றும் இமயமதில் கொடி பொறித்தானென்றும், வாதாபி போரதனில் வாகை சூடினானென்றும், எத்தனையோ உண்டிங்கு; எல்லாம் கதையாக!

சிற்சிலவற்றினை உள்ளடக்கி செந்தமிழின் சுவை கூட்டித் தந்துள்ளார் இலக்கியத்தில். எனினும் விவரம், விளக்க நூ. போர்முறையின் வகைபற்றிய தகவல்மிகக் கொண்ட, ஏடாக்கித் தரவில்லை, நாடதிர நடாத்திய போர்பற்றி. குறிப்பெழுதும் வழக்கமில்லை, ஏடு கிடைத்திடவில்லை. கற்பனை நயத்துடனே கலிங்கத்துப்பரணி உண்டு; சுவையும் பயனும் அதில் மிகுதி, ஐயமில்லை; ஆயினும் வரலாற்று ஏடல்ல; போர்வகை அறிந்து பயன்பெற வழிகாட்ட வல்லதா. ஓசை நயத்தாலேயே போர்க்களம் காட்டுகின்றார் புலவர் பரணிதனில்! ஆம்! படி,த்தோர் எழுச்சிகொள்வர்!! ஆயினும் களந்தன்னில் இன்னபடை இப்புறத்தில் இன்னவிதம் தாக்கிடின், எதிர்த்திட வழி இஃது என்று காட்டும் கண்ணாடியாகிடுமோ! இல்லை! கவிதைச் சிறப்புண்டு, பசுவையுண்டு!!

போர்வெறுத்த இயல்பதனால், போரே பொல்லாங்கு, அதனைத் தவிர்த்திடலே முறை எனும் நெறியதனால், போர்பற்றி ஏடெழுத புலவோர் மறுத்தனர் என்று கூறுவரேல், உண்மை அதில் ஓரளவு உண்டென்போம் எனினும், போர்பற்றி மட்டுமல்ல, மற்ற பொன்னான பலபற்றியும் இதே போக்கினிலே இருந்ததனை மறந்திட இயலாதே. இம்மன்னன் மகன் இன்னான், இவ்வூரில் இடம் பெற்றான், இத்தனை ஆண்டுகளிருந்திட்டான், இந்நிறத்தான், இன்ன இயல்புடையான், இவனுக்குற்ற நண்பரிவர், இவன் நாட்டம் இதில் என்பன போன்றவையும் எடுத்துரைக்க ஏடில்லை, எங்கெங்கோ தேடி, கல்வெட்டு காண்கின்றார்; இதற்கு இது பொருள் என்றுரைப்பார் ஒருவர். இல்லை! பொருள் இஃதல்ல! என்று கூறி வேறொருவர் மறுத்திடுவார். இருகருத்தும் கொண்டு, குழம்பிடுவார் படித்திடுவோர். இது நிலைமை. எனவேதான், வீரம் செறிந்திருந்த நம் நாட்டின் புகழ்க்காதை முழு அளவில் தெரிந்திட வழி இல்லை. மற்றைய நாட்டில் நிலை வேறு.

❋

இப்பொது நடைபெற்றிடும் போரில் எழுச்சி மிகு நிகழ்ச்சிகள், உணர்ச்சிக் கொந்தளிப்பில் உப்பரிகை வாசியையும் தள்ளிடும் காட்சிகள் பல உண்டு. இவையெல்லாம் எடுத்துக் காட்டும் படம்வேண்டும், எழுத்தோவியமாக

இறந்தனன் ஐயோ! உம் மகன்! என்று
உரைக்கக்கேட்டஉடன்இதயம்அத்தந்தைக்கு
என்ன நிலையாகும். எவ்விதம் துடி துடிப்பார்,
எத்தனை எண்ணிடுவார்! சுட்டிப் பயல்
இவன், குலப்பெருமை விளக்கிடுவான், மாடு
மனை பெற்று மகிழ்ந்திடுவான் சீமானாய்,
என்று பலர் கூறியது கேட்டு இன்புற்ற நாட்
களையும் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணா
கிப் போகுமன்றோ! இன்று நாம்காணுகின்றது
யாதெனில் இளைஞன், ஒரு வீரன் இறந்து
பட்டான், வீரப் போர் புரிந்து; தந்தைக்குக்
கூறுகிறார்; தத்தளித்திடவில்லை; தலை
நிமிர்ந்து நடக்கின்றார்! நான் பெற்ற பிள்ளை
யவன் நாட்டைக் காத்திடும் போரில், இன்
னுயிரை ஈந்திட்டான், இறவாப் புகழ் பெற்
றான்; இவன் என் மகன் என்றுகூறிடும்பேறு
பெற்றேன்! எத்தனையோ தந்தையர்கள்
இழந்துள்ளார் மகவுகளை! அந்த இழப்பு
பற்றி எவர் எண்ணிடப் போகின்றார். நாடு
உள்ளளவும், நல்லியல்பு உள்ளளவும் என்
மகனை நான் இழந்த இணையில்லாச் சேதி

யினை, கண்களில் நீர்சோர, கைகூப்பி நின்றுமேதான், எவரும் கூறிடுவர், என் மகன் என்றும் நிலைத்திருப்பான். கொற்றம் அழியாது கொடியும் தாழாது இருந்திடும் நிலைகண்டு மகிழ்ந்திடும் போதெல்லாம் இந்த நிலை நாடுபெற உயிர் ஈந்தான், இன்னார் மகன் இன்னான் என்றியம்பிக் கசிந்திடுவார். இஃதன்றோ யான் பெற்ற பேறு! எனக்கூறி ஏறுநடை போடுகிறார், மகனை இழந்திட்ட மாமுதியோர்! நெஞ்சை உருக்கிடும் ஓர் சித்திரமன்றோ இஃது? கருத்துக்குத் தவியாகத் தவித்திடும் கவிஞர்கட்கு, கருவூலமன்றோ, இக்களம் காட்டும் காதையது. ஒன்றல்ல, பல உண்டு இதுபோல. இவையாவும் தொகுத்திட வேண்டும் முறையாக. வழிவழி வந்திடுவோர் பெறத்தக்க வரலாறாக.

✻

அம்மா! உன் கணவன் ஆவிபிரிந்
தென்றார்.

அத்தான்! உமை இழந்தேனா என்று
மொழியால் அல்ல, விழி நீரால் கேட்கின்றாள்
மாதுதானும்.

அஞ்சா நெஞ்சனிவன்! ஆற்றல் மிக்
கோன்!

ஒரு துளியும் கலங்காது கடும் போரிட்
டான்! சமாய்த்தான் எதிரிகளை! மண்ணில்
சாய்ந்தான்!

வீர ஒளிவிடு கண்ணினான், சாகுமுன்பு
எதிரிகள் ஓடிடக் கண்டான், பெருமிதமும்
கொண்டான்.

இத்தகு வீரர்தம்மின் இரத்தம் படிவ
தாலே, இந்த நம் நாட்டு மண்ணும் மாண்பு
மிகுந்திடும், உணர்கின்றோம்.

உத்தமன் இவன் பேர் இந்த உல
கெலாம் பரவும், எவர் உளத்திலும் எழுச்சி
சேர்க்கும்.

விழியினில் இனித் தென்படமாட்டான்
வீரன்! நம் இதயமே வீற்றுளான், நாடு
காத்தோன்.

இவ்விதம் கூறுகின்றனர், போர்க்களத்தில் வீரப்பணியாற்றி மரணமுற்ற கணவனைப்பற்றி,

திக்கற்றுப் போனோம் நாங்கள் என்று
தேம்பிய தையல்தானும்

வீடதில் வேதனைத் தீ மூண்டது, நெஞ்சி
லுந்தான்

ஆயினும் அவர் ஆற்றல் தன்னால்

நாடதில் தீயோர் மூட்ட எண்ணிய நாசந்
தானும்

வீழ்ந்தது! நாடு வாழ்ந்தது என்ப
தெண்ணி—

ஏழையின் நெஞ்சில் பொங்கிடும் பெரு
மிதம் தன்னால்

பூவிழந்த வளானேன் புலம்புகின்றேன்,
எனினும்

நாடெல்லாம் பூக்காடாக நற்பணியாற்றி
னோனின்

நாயகி நானென்றும் பேறு பெற்றனன்
என்றாள் மாது.

போகின்றான் பார், அந்தப் பொதிமாடு! போர் மும்முரமாக நடைபெற்றபோது, முடக்குவாத நோய் வந்துற்றதென்று பொய்யுரைத்து, அப்பொய்யை மெய்போலாக்க பொற்காசு தூவி தப்பித்தான்! உயிர் சுமந்துசெல்கின்றான் காண்போர்; பிணம் என்கின்றார்.

என்முன் நின்றிட எவர்க்கு உண்டு திறமை என எக்காளமிட்டிடுவான் இக்காளை. எப்போதும் வம்புக்கு நின்றிடுவான்; வாய்ச்சண்டையில் வல்லமை காட்டிடுவான். போர்க்களம் சென்றான்! நடந்ததென்ன? வாள் சுழற்றி வந்தனனும் ஒரு வீரன் — பகைப்படையிலுள்ளோன். கைநடுக்கம் இவனுக்கு! கட்கம் நழுவிற்று! காலில் வீழ்ந்து, சிறைபிடித்துச் சென்றுவிடு. கொல்லாதே! சிற்றப்பா எனக்குண்டு, சீமான்! நீ கேட்கும் செல்வம் கொடுத்து என்னை மீட்டிடுவார்! உனக்கும் இலாபம்! என் உயிரைப் பறிப்பதனால் என்ன கிட்டும்! வேண்டாம், விட்டுவிடு! என்று கெஞ்சிக் கேட்டானும்; கோழை நீ களம் வந்ததன்றோ இழுக்கு! உன்னைக் கொல்ல, வாள் ஒன்றும் வேண்டுமோ! ஓடிப்போடா! வாள்விழி மாதரின் கேலிபோதும், உன் உயிரைவாட்ட! உயிரினும் பெரிது மானம் என்னும் உண்மை உனக்கல்ல, மனிதர்க்கு! போ! போ! என்றானும் பகைப்படையின் வீரனுந்தான்,

✻

உருட்டி விழி காட்டிடும் உலுத்தன் மருட்டிடுவான் மாந்தோப்பில், மடுவங்கரையில், மான்விழி மாதர்களை! போரில்? அவனெங்கே களம் சென்றான்? எதிரியுடன் கூடிக்கொண்டான்! எனக்கென்று ஓர் எதிர்காலம் உறுதி என்றால் என் வசம் உள்ளதொரு கோட்டைவாசல் உமக்காகத் திறந்திருக்கும் என்றோர் ஓலை அனுப்பினனும், எதிர்த்து வந்த வேந்தனுக்கு! எச்சிற்கலயம் இவனுக்கு. இழுத்து வந்திடுவீர் இவனை என்று கூறிச் சிரித்தானும் நம் கொடி தாழ்த்த வந்த பகை நாட்டான். இவனை மணந்திட்ட மாதுதானும், பாவம்! என்ன வேதனையைப் பெற்றாளோ; எண்ணிடவே மனம் தாளவில்லை. தன் கணவன் வீரன் அல்ல, பேரம் பேசியவன், கோழை எனும் சொல்போல, மானம் மதித்திடும் மங்கையரின் இதயத்திற்கோர் வேலுண்டோ! வெந்துபோனாள் வேதனையால், தீயில் மூழ்கிக் கருகியேவிட்டாளாம் மானமுள்ளாள்.

✻

தமிழகத்திலே, தன்னிகரில்லா வீரம் செறிந்திருந்த நாட்களிலும் கோழைத்தனம் காட்டினவர் சிலர் இருந்திருப்பர்—அவர் குறித்து உரையாடல் எங்கனம் இருந்திருக்கும் என்பதுபற்றி எண்ணிப்பார்த்திடின், மேலே உள்ளவை போன்ற எத்தனையோ கிடைத்திடும். இவைபற்றி எல்லாம் எழுத்தோவியங்கள் வேண்டும்; மிகுதியாக!

✻

பிற நாடுகளில் இற்றைய நாட்களிலும் நம் நாட்டில் பழங்காலத்திலும், போருக்குச் சென்றான், புகழ் பெற்றான் என்றோ, களத்திலே வீழ்ந்துபட்டான் என்றோதான் கூறத்தகும் நிகழ்ச்சிகள், நிரம்ப.

தாழ்ந்த நிலை பெற்றுவிட்ட நம் நாட்டில், இது காறும் சண்டையின்போது சம்பாதித்தான் என்ற பேச்சே பலமாக அடிபடக் கேட்டுள்ளோம்

நூல் வாணிபம், அவருக்கு! சண்டைக்கு முன்பு சரக்கு இருப்பு ஏராளம்; கட்டுக்கு முப்பது ஏறிவிட்டது. கடவுள் அருளாலே பத்து இலட்சம் ஒரே வருடத்தில! போன வருடம் பங்குனித் திருநாள் நடத்தினார், பத்தாயிரம் செலவிட்டு, கலெக்டர் வேலைக்குப் போகப் போகிறான் மருமகன்!—

இதுபோன்ற பேச்சு நம் நாட்டில் நிரம்பக் கேட்டிருக்கிறோம்.

சண்டையிலே செத்தான் என்பதல்ல சண்டையிலே சம்பாதித்தான் என்ற பேச்சு—இதுவரையில்.

இம்முறை அதுபோன்ற நிலை எழுவதைச் சமூகம் அனுமதிக்காது; சண்டை, இங்கே! நம் நாட்டில்! இதில் நாம சாய்ந்துவிடுவோமானால், சொத்தில்லை, சுகமில்லை, மானமே பறிபோகும், எனவே, வீரப் போரிட்டு பகையை முறியடிக்கும் தீரர்கள் பிறந்துள்ள நாட்டில், சண்டை வந்தது, சரக்கு குவித்துள்ளோம், விலையை ஏற்றுவோம், நிறையச் சம்பாதிப்போம் என்று திட்டமிடுவோரை, விழிப்புற்ற நாடு விட்டுவைக்காது.

இலாப வேட்டைக்காரர் கொழுத்திட அல்ல, வீரர் பல்லோர் இன்று தியாகத் தீயிலே குளித்தெழுந்திருக்கத் துணிந்திருப்பது. இதனை இன்றே அறிந்திடல் நன்று! இடரும் இழிவும் படருமுன்னம், இலாபவேட்டை நோக்கத்தை விட்டுவிடுவதுதான் முறை, நெறி.

❀

ஓர் பெருங்குறை உளது நம் நாட்டு மக்களிடம்—அறமழித்துப் பொருள் பெறுவார் தம்மை இகழ்ந்திருத்தல் எனும் இயல்பு எழுந்திடுவதில்லை; எவ்வழி அவர் சென்று, எத்தனைச் சூதுடனே எளியோரை ஏய்த்துப் பொருள் பெற்றிடினும் அவர் பெற்ற பொருளின் அளவு எண்ணி ஏத்துகின்றார்; அவராற்றல் அதுவென்று போற்றுகின்றார், அடி பணிந்து நின்றிடவும் முயலுகின்றார்; அதுகண்டு பெரும் பொருளைக் குவித்திட்டோன் அகமகிழ்ந்து, அறமழித்தோன் என்பதனால் அவனி தூற்றும் என்று அஞ்சிக் கிடந்திட்டேன் சின்னாட்கள், தவறு அது, மிகத் தவறு; கொல்புலிமுன் எவரேதான் துணிந்து நிற்பர், கோலம் காட்டும் மானெனின் பிணைத்திடத் துடிப்பர், இப்புவியின் இயல்பு இது என்று எண்ணி இறுமாந்து கிடக்கின்றார்; மற்றும் சிலர் இம்முறையில் நாமும் முன்னேற வேண்டுமென்று முனைகின்றார், அநீதி தானும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி, நாட்டைக் காடாக்கி விடுகிறது, காண்கின்றோம்.

முன்பு நடைபெற்ற பெரும்போரின்போது மேலை நாட்டுள்ளோரெல்லாம், களம் நின்று குருதி கொட்டும் வீரம் போற்றி, கவிதை புனைந்ததுடன் நின்றாரில்லை, அவர்க்கே உடனடியாய் எல்லாப் பொருளும், நமக்கெதற்கு இந்நாளில் சுவைப் பண்டங்கள் என்றெண்ணித் தேவைகளைக் குறைத்துக்கொண்டார், பால் வேண்டேன் பழம் வேண்டேன், பற்பல பண்டம் வேண்டேன், நடமாடும் அளவுக்கு உடல் வலிவு தர வல்லது போதும், மற்றதெல்லாம், நாம் வாழப் போராடும் நண்பர்கட்கு அளித்திடுவோம் என்றுரைத்து, தியாகம் செய்தர். உண்ணும் உணவு வகை மாற்றிக்கொண்டார், அளவினைக் குறைத்துக் கொண்டார்; நைந்திடும் வரையில் உள்ள உடை போதுமென்றார்; ஊரில் பண்டம் தேடி அலைந்தாரில்லை; அதனாலே அங்காடி அதிபதிகள் ஆதாயம் தேடிடும் அரிய வாய்ப்பு இது என்று பண்டத்தின் விலை ஏற்றி விற்றிட மார்க்கமில்லை; இங்கோ, எட்டு பதினெட்டு ஆகிற்று என்ற அளவு அல்ல; எட்டு எண்பதாகி, ஏழை வாழ்வில் எரி நெருப்பு வீழ்ந்ததனைக் கண்டோம். முன்பு. இன்றும் அதுதான் முறை என்று ஆகிடுமேல், ஏழையின் பெருமூச்சே புயலாகிப் புல்லர் வாழ்வை வேரறுத்துச் சாய்த்துவிடும் புத்தறிவுடனே இன்று நடந்திடுதல் வேண்டும், பச்சை இரத்தம் பரிமாறிப் பகைவரை ஓட்டும் வீரர், நமக்கேற்ற நாடே இஃது என்றெண்ணிப் பெருமிதம் பெறவும் வேண்டும்.

❀

ஐயன் அளித்தான் என்றார், அவர் ஆற்றல் அஃது என்றும் தத்துவம் கூறிடுதல் உண்டு. ஐயன், சிலருக்கல்ல, எல்லோர்க்கும் பொது! எல்லாம் எல்லோர்க்கும் எனும் முறை அறிந்தவனே இறையவன். இவனைத் திரையாக்கிக கொண்டு, ஏழையரை வஞ்சித்து இலாபம் பெற்று, ஐயன் அளித்ததிது என்று பேசுவது, முறையாபோ!

ஆற்றல் பாராட்டிடுதல் வேண்டும், இல்லை என்று கூறவில்லை. ஆயின் ஆற்றல் தந்த விளைவு கண்டன்றோ பாராட்டு தருதல் வேண்டும்.

நேற்றிரவு இருளதிசம், இடர் மிக்க பாதைதனில், புரவிகள் மிரட்சி கொண்டு, பாய்ந்தோடின, வண்டி பாறை மோதி நொறுங்கிடுமோ என்றஞ்சிக் கூவினர் பயணம் செய்தோர். அந்த வேளைதன்னில், கட்டுடல் படைத்திட்டோன், அஞ்சா நெஞ்சன், கலங்காது ஓடி வந்து குதிரையின் கயிறுபற்றி, இழுத்து நிறுத்திவிட்டான் வண்டியினை—இது ஆற்றல், ஐயமில்லை!

ஆயின், இதற்குப் பாராட்டு எப்போது? வண்டி கவிழாமல் வல்லமையால் நிறுத்தியவன் உள்ளே இருந்தோர்க்குத் துணையாகி, துயர்போக்கிக் காத்திட்டால். அதுபோலன்றி காட்டுப் பாதையிலே சடுகிச் செல்லும் குதிரை வேகத்தை வலிவினால் தடுத்தவனும், உள்ளே இருந்தோர் முன் உருட்டுவிழி காட்டி ஒரு வார்த்தை பேசாமல் உடைமையெலாம் கொடுத்திடுக; உயிர் தப்பவேண்டுமெனில் உடனே கொடுத்திடுக! என மிரட்டிப் பொருள் பறித்தால், அவன் வலிவு போற்றி ஓர்விருத்தம் இயற்றுவரோ, ஆற்றலைப் பாராட்டி அகவலோ பாடிடுவார்!

ஆற்றல் போற்றுதலுக்குரியது ஆகவேண்டின், அதன் விளைவு, நன்மை பயத்திடுவதாய் அமைய வேண்டும்.

உடல் வலிவால் வரும் ஆற்றல் குறித்த இந்த விளக்கம், பொருள் குவிக்கும் ஆற்றல் என்கின்றாரே, அதற்கும் பொருந்தும். ஏழையை வஞ்சித்தால், ஆற்றல் அல்ல! இருட்டறையில் பொருளைப் போட்டடைத்து, இல்லையே என்று கைவிரித்துக் கண்சிமிட்டி இவ்வளவு விலைதந்தால் எங்கிருந்தோ கொண்டு வரு

கின்றேன் உனக்காக என்று கூறிப் பொருள்பறித்தல் போற்றிடத்தக்கதோர் ஆற்றல் அல்ல; புருக்குஞ்சைப் பிடித்துத் தின்னும் பூனைப்போக்கு, மான்கன்றை மடக்கிடும் புலியின்போக்கு, மலர்ச்செடியின் மறைவிருந்து தீண்டிக்கொல்லும் கருநாகம் கொள்ளும்போக்கு! மதியுள்ளார் இதனை ஆற்றலெனக் கூறமாட்டார்! ஆயினும் நம்நாட்டில், இதுபோன்ற ஆற்றலால் பொருளைச் சேர்த்து புதுப்பொலிவுகொண்டுவிடும் பூமான் தம்மை, பெம்மானின் பேரருளால் பெற்றான் செல்வம் என்று பேசுவோரும், அறிவுமிக்கோன், இன்னவிதம் ஆகுமென முன்பறிந்து பெற்றான் ஆதாயம் மிகப்பெரிய அளவு என்று கூறுவோரும் உளர்; நிரம்ப; இன்றும். இந்த இயல்பு மாறவேண்டும், மாய்ந்திடுதல்வேண்டும். அதிலும் இன்னுயிரை ஈந்தேனும் தாய்நாட்டைக் காத்திடுவோம் என்று காளையர்கள் களம் நிற்கும் இந்த நாளில் இதுபோல நடந்திடுவதனைப் பொறுத்திடுதல் ஆகாது.

❋

என் மகனை நான் இழந்தேன் நாட்டுக்காக! இதோ காணீர் அவன் வடிவம்! நடமாடி வந்த மைந்தன், படமாகிப்போனான், பாரீர்!—என்று முதியவர் கூறி நிற்கும்போது, சான்றோர் கண்களில் நீர் துளிக்கும், நெஞ்சிலே தூய்மை சேரும்.

❋

சண்டை நடந்தபோது, சரக்கினைச் சேர்த்து நானும், சர்வேசன் அருளினாலே சம்பாதித்தேன் பொருள் ஏராளம்; அந்தப் பொருள்கொண்டு அமைத்ததே இப்புதிய இல்லம்; சுற்றிலும் தோட்டம்; மானும் மயிலும் உண்டு; மலர்க்கூட்டம் நிரம்ப உண்டு; மகளுக்கு விருப்பம் மிகவும்—என்று ஓர் சீமான் கூறிடக் கேட்பவர்க்கு, கண்களில் என்ன தோன்றும். கனிவா, எழுச்சியா? இல்லை! இல்லை! காசாசைதோன்றும். நாவாலே புகழ்சொரிவார், நெஞ்சிலோ, நாசமாய்ப் போவான் இவன் என்றே எண்ணிக்கொள்வார். நாடு விழித்துக்கொண்டுளது, நாசவேலைக்காரருக்கு இடம் தராது என்பதனை நாளும் உணர்த்திவந்தால், நரிக்குணம்கொண்டபேரும், நடுங்குவர், ஒடுங்கிப்போவர். அதற்கு, அறமறிந்தோர் அஞ்சாமல் கூறவேண்டும், நெறிமறவாதிருந்திடுக! என்பதாக.

❋

என் தோட்டம்! என் மாடம் கூடம்! என்று எத்தனைதான் காட்டிடினும், இதோ என் மகன்! இறந்துபட்டான்! இறவாப் புகழ்பெற்றான்! என்று காட்டி நிற்கும் தந்தையின் கால்தூசுக்கும் நிகராமோ அவையெல்லாம். இல்லை! இல்லை!

இதனை அறிந்துள்ளோம், அதனால்தான், நாட்டுக்கோர் இடர்ப்பாடு வந்துற்ற வேளையிலே, நாடாளும் முறை குறித்து நமக்குள்ளே உள்ள பல கருத்து மாறுபாட்டை ஒதுக்கிவிட்டு, நம்மாலானதனைச் செய்திடப் புறப்பட்டோம். பகைவனும் ஓர் முனையில் பணியலானான்.

அண்ணன்,

அண்ணாதுரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

டுக் கோபித்திடத் தோன்றும். பொறுத்துக்கொள்க! புதிர் போட்டோமில்லை, பொருளற்றதனைப் பேசவில்லை, புவிமீது மிகப் பெரிய தலைவர் பேச்சு, எமை இவ்விதமாய்க் கேட்டிடச் செய்தது, என் செய்வோம்.

கண் உண்டு! காண அல்ல!
என்கின்றார்,—ஆம்!—தலைவர்—நாட்டின் அதிபர்!!

அரசு முறைகள் பலவற்றுள்ளே அருமை மிகுந்தது பாராளு மன்ற ஜனநாயக முறைதான் என்று அரசியல் அறிவாளர் அறைகின்றார். இவரோ, பாராளு மன்றமொன்றை வைத்துள்ளார் — எனினும் கண் உண்டு! காண அல்ல!! என்பார் போல, உண்டிங்கு பாராளுமன்றம் ஒன்று, ஆயின் அஃது நாடாளும் கருவி அல்ல; நான் விரும்பும் போக்கில், நா அசைக்கும், மற்றெதும் செய்திடாது என்கின்றார்.

பாராளுமன்றம், நாட்டின் நிலையினைக் காண, மக்கள் படைத்த கண்ணும்!

பாராளு மன்றம், மக்கள் பேசிடும் எண்ணம் கேட்டு அறிந்திடக் காது.

பாராளு மன்றம், மக்கள் சார்பில், அவர் ஆணை இன்னதென்று எடுத்து இயம்பிடும், வாய்!

பாராளு மன்றம், கண்ணும் காதாய், வாயாய், இருந்திடும் மக்கட்காக! பாராளுமன்றம் தான் கண்டதனைக் கேட்டதனை எடுத்துக் கூற. அதற்கேற்ப நாடாளும் நாயகரும் நடந்திடுதல் வெண்டும், இஃதே ஜனநாயகமென்னும் பேர்கொண்ட முறையுமாகும்.

எனது நாட்டில் உண்டு பாராளு மன்றம்; எதையோ பேசும்; ஆயின் அதன் பேச்சைக் கேட்டிட வேண்டும் என்பதில்லை! பாராளு மன்றம் கூறும் பல; எனக்கு விருப்பம் இல்லையென்றால், ஏற்றுக் கொள்ளேன்!

பேசிடும், பேசச் சொன்னால்!

கேட்பேன், விருப்பம் இருந்தால்!

சொன்னபடி நடந்திடுக என்றுரைக்கும் அதிகாரம் பாராளு மன்றத்திற்கு இல்லை; இல்லை!

பாராளு மன்றம் எனைக் கட்டுப்படுத்தும் உரிமை கொண்டதல்ல,

கூட்டுவேன், கூடுவர்! ஓட்டுவேன், ஓடுவர்!

எல்லாம் நானே! எதற்கும் நானே!

நானே அமைத்தேன் பாராளு மன்றங் கூட!!

நான் அமைத்தது, நாடாளும் வேலைக்கல்ல!

மற்றோர் அமைப்பு உண்டு, மக்கள் மன்றம்!

அதற்கும் உரிமை உண்டு, பேசிட!

இதனை அமைத்தவனும் நானேதான்!

நான் அமைத்த பதுமைக் கூடம் நாடாள அல்ல!

அதற்கு நான்! நானேதான்!!

எவர் இதுபோல் கூறுகிறார் என்கின்றீரோ! இருக்கின்றார் இதுபோன்ற கருத்துமிழ்ந்து, இறுமாப்பாளர்! இந்தோனிஷியாவின் அதிபர் சுகர்னோ! இதுவென்ன நோய் என்று கேட்கின்றீர்கள்! இவர் டாக்டர்! டாக்டர் சுகர்னோ, அறிந்திடுவீர், இவரின் பெயரே! ○

# அன்னை அழைத்தாள்!

**நீலவண்ணன்**

சியால்கோட் போர்முனைக்குச் சில மைல்கள் தள்ளி அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் போர் வீரன் கண்ணாயிரம் ஏதோ சிந்தனையிலாழ்ந்தவாறு உலவிக் கொண்டிருந்தான். அவனுடைய துணைவர்களாக மூன்று நபர்கள் ஏதோ வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

தொலைவில் எங்கோ விமானங்கள் பறந்து செல்கின்ற சப்தமும், குண்டுகள் வெடிக்கப்படும் சப்தமும் காற்றிலே மிதந்து வந்தது!

ஸ்டவ் அடுப்பின் மீது தேனீருக்கான தண்ணீர் கெட்டிலில் கொதித்துக்கொண்டிருந்தது! கண்ணாயிரத்தின் மனத்திலும் நினைவு கொதித்துக்கொண்டிருந்தது!

○

கண்ணாயிரம் தஞ்சாவூரைச் சேர்ந்தவன். அவன் பிறந்து வளர்ந்து படித்ததெல்லாம் அங்குதான்! சுமாரான வசதியுள்ள குடும்பத்தில்தான்பிறந்தான்! எப்படியோ பத்தாவது வரைப் படித்து முடித்தான்!

அவன், படிக்கும்போது சிறிது புத்திசாலித்தனமாக இருந்ததால், ஆசிரியர்களின் அன்பைப் பெற்று, அவர்கள் கொடுத்த ஊக்கத்தினாலும், ஆதரவினாலும், ஆண்டுதோறும் ஒவ்வொரு வகுப்பிலும் தேறி, முடிவாகப் பத்தாவதுவரை படித்தான்!

அவன் பள்ளியில் படித்துவருங் காலத்தில், அவன் தந்தை நோய்வாய்ப்பட்டு, இறந்துபோனார். குடும்பச் சுமை அவன் தாய்மீதும் அவன் மீதும் விழுந்தது!

சீக்கிரம் படிப்பை முடித்துக்கொண்டு சயபாதிக்கவேண்டும். தாயின் மனது குளிர நடந்து நல்ல மகன் என்ற பெயரை நிலைநாட்ட வேண்டும் என்று அவன் எண்ணி வந்தான்; பத்தொன்பதாவது வயதைக் கடந்து, இருபதாவதுவயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்தான் அவன்!

அவனுக்குச் சிறு வயதிலிருந்தே தோழனாக விளங்கி வந்தான் மொய்தீன்பிச்சையினுடைய மகன் அகமத்! அவனும் கண்ணாயிரமும், இணைபிரியா நண்பர்கள்! அகமதும் கண்ணாயிரமும் படிப்பில் போட்டி போட்டுக்கொண்டு படிப்பார்கள். அவன் படிப்பு நேரம், உணவு உட்கொள்ளும் நேரம் தவிர, மற்ற நேரத்தில் கண்ணாயிரத்துடனே இருப்பதைக் காணலாம். மொய்தீன் பிச்சையின் கடையிலேதான், கணாயிரத்தின் தகப்பனார் பணிபுரிந்து வந்தார். அவரை மொய்தீன் பிச்சை, ஒரு சகோதரராகத்தான் கவனித்தாரே தவிர, ஊழியம் புரிபவர் என்று எண்ணியதில்லை. அதுபோல் கணாயிரத்தின் தந்தையும், பிச்சையுடன் அன்பாக நடந்து வந்தார். வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பார்! இந்த ஒற்றுமையின் விளைவாகவே அகமத்தும் கண்ணாயிரமும், இணைபிரியாத நண்பர்களாக இருக்க முடிந்தது!

அந்த நாட்களிலே கண்ணாயிரமும் அகமத்தும் விளையாடிய விளையாட்டுகள் பரீட்சையில் பெற்ற வெற்றிகள் — போட்டிகளில அடைந்த பரிசுகள் — அந்தப் பள்ளிக்கே பெருமையைத் தேடித் தந்தன எனலாம்.

காலம் சோதிக்க ஆரம்பித்தது! கண்ணாயிரம் தந்தையை இழந்தான்! மொய்தீன் பிச்சை, பெரும் அளவுக்கு வியாபாரம்புரிய, வடக்கு நோக்கிச் சென்றுவிட்டார் தனது குடும்பத்துடன்!

அகமத்து, பிரியா விடையாக கண்ணாயிரத்தினிடம், கதறி அழுது ஊர் புறப்பட்டான்.

○

மொய்தீன்பிச்சை, அடிக்கடி கடிதம் போடுவார். பண உதவிகளும செய்து வந்தார். அகமத்தும், கண்ணாயிரத்துக்கு அடிக்கடி எழுதி வந்தான். கடிதங்கள் மூலம் நட்பும் உறவும் தொடர்ந்து வளர்ந்தது!

தஞ்சாவூர் அதிகாரி ஒருவரின் யோசனையின் பேரில் கண்ணாயிரம் ராணுவத்தில் சேர மனுச்செய்தான்! வேலை கிடைத்தது!

மகிழ்ச்சிச் செய்தியைத் தாயிடம் கூறினான்! அவளும் 'மகிழ்ந்தாள்! பிறகு மகனைப் பிரியவேண்டுமே என்ற வருத்தத்தில் சிறிது கலங்கினாள்! அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஆறுதல் கூறினார்கள்! "அபாயம் ஒன்றுமில்லை. சமாதான காலம் தான்! விடைகொடுங்கள் அம்மா!" என்று தாயிடம் ஆசியும், விடையும், பெற்று ரயிலேறினான் கண்ணாயிரம்!

○

வாரத்துக்கொருமுறை கடிதமும், மாதம் ஒரு முறை பணமும் அனுப்பித் தன் தாயைக் காத்துவந்தான் கண்ணாயிரம்! ஆண்டுக்கொரு முறை தாயைப் பார்த்துப்போக வருவான்!

ஆண்டுகள் உருண்டோடின! கண்ணாயிரத்தின் தாய் காலமானாள்!

இப்பொழுது அவனது அன்னை இந்த நாடுதான்! உடன் பிறப்புகள் நமது மக்கள்தான்! இந்த இலட்சியத்தோடுதான் அவன், ராணுவத்தில் பணிபுரிந்துவந்தான்

○

பாகிஸ்தான் போர்க்குரல் எழுப்பியதைத் தொடர்ந்து, அவனும் நமது எல்லைப்புறத்திலே, பணிபுரிந்துவந்தான். சில நாட்களாக வெற்றிகள் மிகக்கண்டான். சியால்கோட் அருகே உள்ள முகாமில் தங்கியிருந்தான்! கடந்துபோன சம்பவங்கள் அவன் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தன! "என்ன மிஸ்டர் கண்ணாயிரம், தேநீர்கூட தயாரித்துவிட்டேன், என்ன யோசனை" என்று, அவனுடைய தோழன் மாரி கேட்டதும, திடுக்

கிட்டு "ஆ...ஆ...ஐ...ஆம்...சாரி" என்று தேநீர்க் கோப்பையை வாங்கி சிறிது தேநீர் அருந்தினான்.

"விடியற்காலை, நாம் தாக்குவதற்குத் தயாராகவேண்டும், நம்மிடம் ஒரு டாங்கிப்படை இருக்கிறது. அதுபோக நாம் நான்கைந்துபேர் இருக்கிறோம், கையிலே துப்பாக்கி, மனதிலே உறுதி! என்ன மிஸ்டர் கண்ணாயிரம்?" என்றான் மாரி!

"நிச்சயமாக! அதுவரை நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். எனக்குத் தூக்கம் வரவில்லை. அத்துடன் இரவு கண்விழித்துப் பழக்கம் உண்டு. நான் எச்சரிக்கையாக இருக்கிறேன். நீங்கள் படுங்கள்" என்றான்! நண்பர்களும், இருந்த இடத்திலேயே வசதிசெய்துகொண்டு ஒதுங்கிப்படுத்தார்கள்!

கண்ணாயிரத்துக்கு ஒன்றும் தோன்றவில்லை. நாட்டுக்கு வந்த கேட்டை நினைத்து பெருமூச்சுவிட்டான்! கடிகாரத்தைப் பார்த்தான்! அது தனது கடமையைச் செய்துகொண்டிருந்தது! திடீரென ஒரு சத்தம்! திடுக்கிட்டு எழுந்தனர் அனைவரும். தம்தம் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு, சத்தம் வந்த திசையை நோக்கினர். அரைமைல் தூரமிருக்கும்! பளிச் பளிச்சென்ற பெரும் அளவு வெளிச்சமும், பயங்கர சத்தமும் கேட்டது! தொடர்ந்தாற்போல இடிமுழக்கம் போன்ற ஒலி!

மாரி, டாங்கிப் படையை எச்சரித்து அதை முன்னேறச்சொல்லிவிட்டு, அதனுடன் ஒட்டியவாறே, இவர்கள் முன்னேறிச் சென்றார்கள்!

அவர்கள் எதிர்பார்த்தவாறே எதிரிப் படையினர் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி டாங்கி சென்றது, குண்டுகளைப் பொழிந்துகொண்டே! கூடவே இவர்கள் சென்றார்கள்! பக்கவாட்டிலிருந்து ஒரு குண்டு வெடிக்கவே, கண்ணாயிரம் ஐயோ! என்று அலறினான்; கீழே வீழ்ந்தான்.

○

கண்ணாயிரம்—எண் 80065. காலிலே குண்டுபாய்ந்திருக்கிறது. காலை அகற்றவேண்டிவரக்கூடும். டாக்டர் குறிப்பேட்டில் இவ்விதம் எழுதினார். கண்ணாயிரம் நினைவின்றி படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தான் டில்லி மருத்துவமனையில். போர்க்களம் பற்றிய நினைவு, குழம்பிக் குழம்பி அவனுக்கு எழுந்தபடி இருந்தது. களத்தில் நின்று கடும் போரிட்டு வருவது போன்ற பிரமை. கண்கள் மூடிக்கிடக்கின்றன, ஆனால் களக்காட்சிதான் தெரிகிறது கண்ணாயிரத்துக்கு.

○

சுமார் முப்பது அடித் தொலைவில் எதிரி ஒருவன் துப்பாக்கியை நீட்டியவாறு ஒரு பள்ளத்திலிருந்து எழுந்தான்! ஒரு கணம் திகைத்துவிட்டான் கண்ணாயிரம்! திடீரெனத் துப்பாக்கியை எடுத்து சுடப் போனான்! ஆனால் அவன் சுடவில்லை! அங்கே அவன் கண்டது எதிரியின் உருவிலிருந்த அகமத்தை! எங்கோ கண்டது போலிருக்கிறதே என்று சிறிது குழம்பினான்! அகமத் வளர்ந்து, பெரியவனாகிவிட்டிருந்தான்!

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு "யார் நீ?" என்றான்! அவனும் "நீ யார்?" என்றான்!

நான் கண்ணாயிரம். இந்தியப் படைவீரன் நெ. 80065 என்றான். "நான் அகமத்......என்று அவன் சொல்லி முடிப்பதற்குள்—அகமத்—நீயா? என்று அருகில் செல்ல நினைத்து சில அடிகள் சென்று பின் நின்றுவிட்டான்!

"ஆம்! நான் அகமத்துதான். நீ கண்ணாயிரம்தானே! எப்படி இருக்கிறாய்? சௌக்கியமா?" என்றான்.

"நல்லபடி இருக்கிறேன்! எவ்வளவு வருடங்கள் ஆயின! அப்பா எப்படி?"

"அப்பா, காலமாய்ட்டார். அம்மா மட்டும் இருக்காங்க—ஆமா—உன் அம்மா?"

"அவுங்களும் போய்ட்டாங்க!',

"சரி உனக்கு கல்யாணம் ஆயிட்டுதா" என்றான் அகமத்.

"இல்லை. உனக்கு ஆகிவிட்டதா?"

"ஊ ஹூம்......"

"அது சரி நீ ஏன் ராணுவத்திலே சேர்ந்தே!"

'எனது அன்னை அழைத்தாள்! அதனால்!"

"உன் அன்னை உன்னைப் பலி வாங்க கூப்பிட்டாள் என்கிறேன் நான்!"

"சே! ஒருக்காலும் இல்லை! அது சரி. நீ ஏன் தொலைவாக நின்று பேசிக்கொண்டிருக்கிறாய்! நான் ஏமாந்தே போய்ட்டேன்! உன் டிரஸ் எங்கே! இந்த டிரஸ்ஸைப் போட்டுகிட்டிருக்கே! அடையாளம் தெரியாம நம்மவங்க, உன்னை சுட்டுடப் போறாங்க" என்றான் கண்ணாயிரம்!

"நம்மவங்களா? யாரு நம்மவங்க? நான் இப்பொழுது பாக்கிஸ்தானத்தைச் சேர்ந்தவன். உனது எதிரி—தெரியுமா?" என்றான் அகமத்.

## சேதி தெரியுமா?

மிக ஆழமான மண்ணெண்ணெய்க் கிணறு கலிபோர்னியாவில் உள்ளது இதன் ஆழம் 7,591 அடி

✸

ஒரு நாளில் இருதயம் 2,500 காலன் இரத்தத்தை வெளியே தள்ளுகிறது ஒருவனுடைய வாழ்நாளில் இருதயம் வெளியே தள்ளும் இரத்தம் ஐந்து கோடியே ஐம்பது லட்சம் காலன் அளவினது ஒரு ஆண்டில் இருதயம் 40,000,00 முறை துடிக்கிறது.

✸

உலகத்தில் 600,000 பூச்சி வகைகளுக்கு மேல் உள்ளன ஒருவன் நாளொன்றுக்கு ஒரு பூச்சியைப் பற்றிப் படிக்கின்றான் என்று வைத்துக்கொண்டால். அவன் எல்லா பூச்சிகளைப் பற்றியும் படிக்க 2,000 ஆண்டுகள் வாழ வேண்டும்.

✸

தேனீக்கள் இறக்கைகளை வேகமாக அடிப்பதால் இரையும் சத்தம் உண்டாகின்றது தேனீக்கள் முன்னும் பின்னுமாக இறக்கைகளை ஒரு வினாடியில் 400 முறைக்குமேல் அடிக்கிறது.

தலையில் எத்தனை மயிர்கள் இருக்கின்றன என்றுநிதானமாகக் கூற முடியாது. கருப்பு மயிருள்ள மனிதனின் தலையில் ஏறக்குறைய 140,000 மயிரும் மங்கல் அல்லது பழுப்பு நிறமுள்ளவனின் தலையில் 109,000 மயிரும் உண்டு.

✸

தாடி வளர்ப்பவருக்கு வரி விதித்த அரசி முதலாம் எலிஸபெத் இராணி.

✸

கதகளி என்பது மலையாள தேசத்தில் நடைபெறும் ஒருவகை ஆட்டம். இவ்வாட்டம் பேச்சில்லாத அபிநயம். இதற்கு ஆட்டக்கதை என்னும் இன்னொரு பெயருண்டு.

"சே! என்ன அகமத்! விளையாட இதுவா சமயம்?" என்று அவனை நெருங்கும் சமயத்தில் துப்பாக்கியை எடுத்து கண்ணாயிரத்துக்கு எதிரே நீட்டினான் அகமத்!

"உண்மையாகவா? நீ என் எதிரியா?" என்றான் கண்ணாயிரம்.

"ஆமாம்! உனக்கு! உனது நாட்டுக்கு!" என்று ஆவேசம் வந்தவனாகக் கூறினான் அகமத்!

"அட துரோகி! இந்திய மண்ணில் பிறந்த நீயுமா இப்படி?" என்று கண்ணாயிரம் பேசிக்கொண்டிருக்கையில் டமார் டமார் என சத்தம் கேட்டது!

"கண்ணாயிரம்! நியாயம்! தர்மம் பேச இதுவல்ல சமயம்! எனது படையினர் வருகிறார்கள். அவர்கள் கையில் சிக்குவதற்கு முன்பு நீ ஓடிவிடு. இதுதான் நான் செய்யக் கூடிய உதவி! நாம் பழகியதால் இந்த ஏற்பாடு"

"அடப் பைத்தியக்காரா! நீயா இப்படிப் பேசுகிறாய். உயிருக்குப் பயந்த கோழையல்ல நான்! நீ ஓடிவிடு. என்னுடன் பேசிக்கொண்டிருப்பதை உனது படையினர் பார்த்தால் உன்னை ஒரு சந்தேகத்துக்குரிய நபராகக் கருதி சித்திரவதை செய்வார்கள். ஆதலால் நீ வேண்டுமானால் ஓடிவிடு" என்றான் கண்ணாயிரம்!

"முடியாது! இந்த உடலில் மூச்சு இருக்கும்வரை அது நடக்காது" என்றான் அகமத்!

"அது சரி! நீ ஒரு சுத்தவீரனாக இருக்கலாம்! அநியாயமான முறையில் முதலில் நீங்கள் தாக்க ஆரம்பித்தீர்களே இது நியாயமா!" என்றான் கண்ணாயிரம்.

"நான்தான் அப்பொழுதே சொன்னேனே, நியாயம் பேச இது சமயமல்ல. அதுவும் நமக்கு உரிமையும் இல்லை" என்றான்.

"ஏனில்லை! ஒரு தலைவன் வெறிபிடித்து அநியாயமாக ஒரு செயலைச் செய்யத் தூண்டினால் மனித இதயம் படைத்த நீங்கள் அதற்குத் தலை அசைத்துவிட வேண்டியதுதானா? மறுத்து புரட்சி செய்ய வேண்டாமா?" என்றான் கண்ணாயிரம்! தொடர்ந்து வெடிச்சத்தங்கள் மிக அருகாமையில் கேட்ட வண்ணம் இருந்தன. படை நெருங்கியவண்ணம் இருப்பதைக் கண்ட அகமத்; "முடிவு சொல்! வெற்றி அல்லது வீர மரணம்! நீ சொன்னது எனக்குத் தெரியாததல்ல! உன் தாயிடம் சோறுண்டேன்! உன் தாயின் அன்பு எனக்கிருந்தது! என்னையும் ஒரு மகனை— உனது சகோதரனாகப் பாவித்தாள்! ஒரு தாயின் இரு புதல்வர்களாக வளர்ந்தோம் பழகினோம். மறுக்கவில்லை! இன்று சூழ்நிலை இப்படி! நீ ஓடிவிடு. கண்ணாயிரம்!"

"முட்டாள்! யாரைப் பார்த்து ஓடு என்கிறாய்! செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக, நமது படையில் சேர்ந்துவிடு. இல்லையேல் சரணடைந்து விடு" என்றான் கண்ணாயிரம்.

"சிறு வயதிலே நண்பர்களாக இருந்தபோது, படிப்பிலே, விளையாட்டிலே, பரிசு பெறுவதிலே போட்டியிட்டோம். பொறாமை கொள்ளவில்லை. ஒன்றாகப் பழகினோம். நினைவிருக்கிறதா?

அதேபோல் இன்று வீரப்போட்டி! ஒன்று நீ கைதாக வேண்டும்! அல்லது நான் இறக்கவேண்டும்" என்றான் அகமத்!

சிறுவயது காலத்தில் நடந்தவைகளைக் கூறியபோது கண்ணாயிரத்துக்கு அழுகையே வந்துவிட்டது! அவ்வளவு பாசத்துடன், பரிவுடன், அகமத்தும், அவன் தந்தையும் நடந்திருக்கிறார்கள்! அவனை வளர்த்திருக்கிறார்கள். அதனால் மனங் கலங்கிவிட்டான். தேம்பித் தேம்பி அழுதான்! அந்த விக்கலுக்கிடையே,

"அகமத்! உன்னைக் கொல்ல மனம் வரவில்லை உன்னை நண்பன் என்ற முறையில் கேட்டுக்கொள்ளுகிறேன். நீ ஓடிவிடு" என்றான்.

"மீண்டும் என்னை ஓடிவிடச் சொல்கிறாயா உன்னைக் கொன்றே விடுவேன்" என்று துப்பாக்கியை நேராகப் பிடித்தான் அகமத்.

அவனாலும் சுடமுடியவில்லை! அவன் கண்களில் நீர்த்திரையிட்டது!

பிறகு கண்ணாயிரம் "அகமத்! என்ன சோதனை பார்த்தாயா? என் அன்னை அழைத்தாள் தன்னைக் காத்திட! தன் மகனையே பலி வாங்க என்று நான் நினைக்கவில்லை" என்றான்.

சிறிது நேர மௌன, இடைவெளிக்குப் பின் அகமத் "கண்ணாயிரம், உன்னிடம் எத்தனை குண்டுகள் மீதமுள்ளன" என்று கேட்டான். கண்ணாயிரம்" மூன்று இருக்கிறது. உன்னிடம் எத்தனை?" என்றான். அகமத் எண்ணிப் பார்த்துவிட்டு "ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. பரவாயில்லை. நீ உன்பெற்ற அன்னைக்குத் துரோகம் செய்ய வேண்டாம்! என்னைக் காப்பாற்றிய அன்னைக்கு நான் துரோகம் செய்ய விரும்பவில்லை—ஆதலால் நீ என்னை நோக்கிச் சுடு. நான் உன் எதிரி! துரோகி! நயவஞ்சகன்! பாசமுள்ளவன்போல் நடித்த பசுத்தோல் போர்த்த புலி வர்க்கத்தைச் சேர்ந்தவன்! என்னை நோக்கிச் சுடு! வெற்றி அல்லது வீர மரணம்!" என்றான்.

அருகாமையில் எதிரிகள் படை வரும் சத்தம் மிகத் தெளிவாகக் கேட்டது! கண்ணாயிரம் முழு பலம் கொண்டு. அகமத்தை நோக்கிச் சுட்டான்! இரண்டு குண்டுகள் குறி தவறிவிட்டன!

கடைசி குண்டு துப்பாக்கியினின்றும் புறப்பட்ட அதே சமயம் அகமத்தின் ஒரே குண்டும் மின்னலென கண்ணாயிரத்தின் உடலில் பாய்ந்தது!

## 2000 ஆண்டுகட்கு முன்பே செயற்கைக்கை!

கை — கால் இழந்தால் செயற்கைமுறையில் கை — கால்கள் பொருத்தப்படுகின்றன அல்லவா? எகிப்து நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, செயற்கைக் கை வைக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டின் பொருட்காட்சி சாலையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சவப்பெட்டி ஒன்று உள்ளது. அதில் உள்ள பிணம் பக்குவமாகப் பாடம் செய்யப்பட்டிருந்தது. அந்தப் பிணத்தின் ஒரு கை செயற்கைக் கை!

அந்த கையை சோதனை செய்வதற்காக இப்போது இந்த செயற்கைக்கையை வெட்டி எடுத்திருக்கிறார்கள்.

அந்தப் பிணம் ஒரு பெரிய ராணுவ அதிகாரி. ஆனால் ஒரு கை நொண்டி. கை இல்லாமல் எகிப்து மன்னர் முன்னால் நிற்பது மரியாதைக் குறைவு என்று கருதி அவர் செயற்கைக் கை பொருத்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

செப்டம்பர்

24ஆ

முதல்

சென்னை கெயிட்டி, மகாராஜா, நடராஜ், கிருஷ்ணவேணி

மற்றும் தென்னுடெங்கும்





தனலெக்ஷ்மி தியேடர்

# கல்யாண மண்டபம்

பாடல்கள் வாலி · தெள்ளூர் தர்மராஜ் · இசை பார்த்தசாரதி B.A.

காமரா கர்ணன் கலை அங்கமுத்து எடிட்டிங் தேவன்

பாடல்கள் ரீரிகார்டிங் · T.S. ரங்கசாமி

ஸ்டுடியோ · சாரதா (லைஸ்ஸீஸ் மெஜஸ்டிக் ஸ்டுடியோஸ்)



கதை, வசனம், டைரக்ஷன் · மா. ரா.

தயாரிப்பு

மா.ரா & K. ஜகன்னுதன் M.A.

BAKTHA

விவரங்களுக்கு · தனலெக்ஷ்மி தியேடர், 10, சேமியர்ஸ் ரோடு, சென்னை-35.


ELEGANT

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிற[illegible] சி. என். அண்ணுதுரை.